1972 ஆகஸ்ட் 17]

(இ) அரசு கல்லூரிகளில் தற்போது பிஎச்.டி. பட்டம் பெற்ற 14 பேராசிரியர்களும் 10 உதவிப் பேராசிரியர்களும் பணியாற்றி வருகிறுர்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழைப் பாடமொழியாக ஏற்று பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. ஆனுல் தமிழில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறுர்கள். அவர்களை தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்களாகத்தான் நாம் கொள்ளவேண்டும். அவர் களுடைய எண்ணிக்கை குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

சென்னை நகராட்சி

* 121 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர எல்லையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : சென்னையைச் சுற்றியுள்ள சில புறநகர்ப் பகுதிகளையும் சென்னை நகரத்தோடு இணைத்து ஒரு பெருநகர் திட்ட மாக உருவாக்கி மேலும் பல நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா? ஆமெனில் அதற்கான விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், தென் சென்னை புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் 134 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையுடன் சேர்க்கக் கோரி ஒரு திட்டத்தை அனுப்பியுள்ளார். இதனுல் புற நகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர், வடிகால் திட்டம் முதலியன சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் விடப்பட ஏது வாகும். பெசன்ட் நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர் இவை மூன்றும் தென் சென்னையைச் சார்ந்த பகுதிகள் ஆகும். இவைகள் ஊரூர், கலிருன்றம், திருவான்மியூர் பகுதியில் உள்ளன. சமீபத்தில்

[1972 ஆகஸ்ட் 17

வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பிலிருந்து தென் சென்னை புறநகர் பகுதியைச் சார்ந்த சுமார் 420 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையில் சேர்க்கப்படவேண்டியுள்ளது. கோடம்பாக்கம்புதூர், தென் சென்னை நகர்ப்புறம், மேற்கு சென்னை நகர்ப்புறம், கொரட்டூர் நகர்ப்புறம் இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவையான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கவேண்டிவரும்.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு தனி முத்திரை

* 122 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு தனியானதோர் சின்னத்தை முத்திரையாகக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோவை மாவட்டத்தில் உள்ள சூலூர் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும், பெருந்தலைவருக்கும், தமிழக அரசின் கோபுரச் சின்னத்துடன் கூடிய பொதுவான முத்திரையை தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தக் கோரிக்கை எப்போது நிறைவேற்றப்படும்? அப்படி நிறைவேற்றப்படும்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுவதைப்போல் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் சின்னம் ஒதுக்குவது குறித்து அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் ஊராட்சி ஒன்றியம் பற்றி முடிவு எடுத்து விடுவோமானால் அதை நடைமுறைப் படுத்திய பிறகு ஊராட்சிமன்றங்களின் தேவை பற்றி பிறகு யோசிக்கலாம். ஊராட்சி ஒன்றியங்களுக்கு அப்படி முத்திரை வழங்குவது பற்றிய கருத்துத்தான் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும்.